DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 34/2023**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | மோகன்தாஸ் | Caste: | |
| Father's Name: | தர்மராஜ் | Calling: | காளவாசல் உரிமையாளர் |
| Village: | காமராஜர் நகர், பரமக்குடி | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 53 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 17.11.2025

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி நகர் காமராஜர் நகரில் வசித்து வருகிறேன். பரமக்குடி தாலுகா பொட்டிதட்டி கிராமத்தில் லிங்கேஷ் என்ற பெயரில் காளவாசல் நடத்தி வருகிறேன். அ.சா.1,2 சாட்சிகளான ராஜேந்திரன், ராஜேஸ்வரி ஆகியோர்களை தெரியும். அவர்கள் செம்பொன்குடி கிராமத்தை சேர்ந்தவர்கள். எனது காளவாசலில் தங்கி வேலை செய்து வருகிறார்கள். ஆஜர் எதிரியை தெரியும். அவர் கள்ளியடியேந்தல் புதுக்குடியிருப்பை சேர்ந்தவர். பொட்டிதட்டி கிராமத்திற்கு அருகில் உள்ளது. அ.சா.1,2 சாட்சிகள் பட்டியல் இனத்தை சேர்ந்த பள்ளர் சமூகத்தை சார்ந்தவர்கள். எதிரி சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த தேவர் சமூகத்தை சார்ந்தவர். கடந்த 25.01.2023 ம் தேதி நான் இராமநாதபுரத்திலிருந்து என் காளவாசலுக்கு மாலை 4.50-5.00 மணியளவில் சென்றேன். அப்போது எதிரிக்கும் அ.சா.1 ராஜேந்திரனுக்கும் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது. எதற்காக வாக்குவாதம் நடந்தது என்றால் ஆஜர் எதிரி ஆடு, மாடுகளை என்னுடைய

காளவாசலில் ஒரு பகுதியில் பயிரிடப்பட்டிருந்த தக்காளி, வெண்டை, வைக்கோல் ஆகியவற்றில் மேய்ந்ததால் வாக்குவாதம் நடந்தது. நான் வந்து விலக்கிவிட்டேன். அந்த சமயத்தில் வேறு யார் இருந்தார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள். அவர்கள் யார் என்று ஞாபகமில்லை. எதிரி அ.சா.1 ராஜேந்திரனை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். எதிரி கல்லை எடுத்து அ.சா.1 ராஜேந்திரனின் மண்டையில் எறிந்துவிட்டார். அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டது. பின்னர் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 34/2023**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சிவக்குமார் | Caste: | |
| Father's Name: | பாண்டி | Calling: | கொத்தனார் |
| Village: | மந்திவலசை | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 42 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 17.11.2025

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா மந்திவலசை கிராமத்தில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சா.ப.சா.5 விஜயகுமாரை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்தை எங்கு வைத்து எதற்காக போட்டேன் என்றால் தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் பொட்டிதட்டி கிராமத்திற்கு அருகில் உள்ள கால்வாயில் நின்று கொண்டிருந்தேன். அப்போது போலிசார் ஆஜர் எதிரிக்கும் அசா.1 மனைவியான ராஜேஸ்வரி(அ.சா.2)க்கும் நடந்த பிரச்சனை சம்பந்தமாக தெரியுமா என்று கேட்டார்கள். தெரியாது என்று சொன்னேன். அந்த பிரச்சனை சம்பந்தமாக விசாரணைக்கு வந்ததாக கையெழுத்து போடும்படி சொன்னதால் போட்டுக்கொடுத்தேன். என்னுடன் வேறு யாரும் கையெழுத்து போட்டார்களா என்றால் இல்லை. பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2.** நான் கையெழுத்து

போட்டபோது நேரம் மாலை 4.00 மணி இருக்கும். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை எதற்காக போட்டேன் என்றால் ஞாபகமில்லை. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3**. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 31.01.2023 ம் தேதி பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் விசாரிக்கும்போது அன்று காலை 7.00 மணியளவில் நானும் பொட்டி தட்டி கிராமத்தை சேர்ந்த கருப்பையா மகன் விஜயகுமாரும் சொந்த வேலையாக லிங்கேஷ் காளவாசல் ஓனர் மோகன்தாஸ் -ஐ பார்க்க போனோம் என்றும் அப்போது பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் வந்து 25.01.2023 ம் தேதி காளவாசலில் நடந்த சண்டை சம்பந்தமாக அதற்காக வழக்கு பதிவு செய்திருப்பதாகவும், சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் கருப்பையா மகன் விஜயகுமாரும் கையெழுத்து செய்தோம் என்றும், பின்பு காலை 8.00 மணியளவில் சம்பவ இடத்தில் உடைந்த நிலையில் கிடந்த சிமெண்ட் கல்லை கைப்பற்றுதல் மகசரில் டிஎஸ்பி கைப்பற்றினார் என்றும், அந்த மகசரில் நானும் விஜயகுமாரும் கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் என்ன எழுதியுள்ளது என்பது தெரியாது என்றும், என் முன்னிலையில்

எதுவும் கைப்பற்றவில்லை என்றும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:—</u>

இல்லை

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)